**In the Court of the District Munsif, Eraniel**

Original Suit No. 138/2012 Date:08.11.2024

(P.W.1)- ரமேஷ்

**2-ஆ ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் இல்லாத இடத்தை இருப்பதாக போட்டிருப்பதாக அதை மாற்றி கொடுக்கவேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் என் முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என் வழக்கறிஞருக்கு நான் சொல்லி அதை அவர் தயார் செய்து அதை படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதலில் எப்போது இதற்குமுன்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் 2012-ஆம் வருடம் ஆகும். தற்போது எனக்கு 34 வயதாகிறது. நான் நங்கன்விளை என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் தாமசிக் கும் நங்கன்விளை நெட்டாங்கோடு பஞ்சாத்தில் உள்ளது. 12 ஆண்டுகளுக்கு முன்பு நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது படித்துக்கொண்டிருந்தேன். தற்போது நான் மகாராஷ்டிராவில் புணேவில் உள்ள கம்பெனியில் வேலை பார்த்துவருகிறேன். இவ்வழக்கை நானும் எங்கள் ஊரைச் சார்ந்த செல்லத்துரை என்பவரும் தாக்கல் செய்துள்ளோம். நான் எங்களது ஊருக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

2. எங்கள் ஊரில் ஊர் தலைவர் உண்டு, துணைத்தலைவர், பொருளாளர் மற்றும் செயலாளர் உண்டு என்றால் சரிதான். ஊரில் பொதுவாக பிரச்சனை ஏற்பட்டால் ஊர் தலைவர்தான் வழக்கு தொடுப்பார் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு ஊரிலிருந்து என்னை யாரும் அதிகாரம்படுத்தவில்லை என்றால் சரிதான். நங்கன்விளை என்ற பெயரை செருப்பன்கோடு என்று தவறுதலாக பஞ்சாயத்து தலைவர் மாற்றிவிட்டார் என்றால் சரிதான். மேற்சொன்ன பெரை மாற்றிய விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் வார்டு நபர் சொல்லிதான் எனக்கு தெரியும் . ஆனால் அவர் யார் என நினைவில்லை. நான் படிக்கும்போது சமுதாய சேவை செய்துகொண்டிருந்தேன். என்ன சமுதாய உதவி என்றால் பள்ளி மற்றும் கல்லூரியில்

(P.W.1)- ரமேஷ்

படிக்கும் மாணவர்களுக்கு உதவி செய்து வந்தேன் என்று சொன்னால் அலுவலகங்களுக்கு செல்பவர்களுக்கு உதவியாக சில காரியங்களை செய்துள்ளேன். யார்யாருக்கு ஆவணம் எல்லாம் திருத்தப்பட்டது என்றால் 8 நபர்களின் விவரங்களை தவறுதலாக செருப்பங்கோடு என்று வீட்டு வரி ரசீது, குடிநீர் ரசீதுகளில் மற்றும் கடைகளின் பெயர் பலகைகளில் போடப்பட்டிருந்தது. மேற்சொன்ன 8 நபர்களும் கடைகள் வைத்திருந்தார்கள் என்றால் செல்லதுரை என்பவர் கடை வைத்திருந்தார் அந்த கடையின் விவரங்களில் செருப்பங்கோடு என்று இருந்தது.

3. நான் மேற்சொன்ன 8 நபர்களின் விவரங்கள் தவறாக இருப்பதை எப்படி அறிந்தேன் என்றால் வார்டு நபர் சொல்லிதான் தெரியுமே தவிர ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தெரியாது. மேற்படி 8 நபர்களின் ஆவணங்களும் வாதி பாகம் சாண்றாவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 8 நபர்களின் விவரங்களில் தவறு பற்றி எனக்கு எந்த பாதிப்பு ஏற்படும் என்றால் எனக்கோ என்னுடைய ஊருக்கோ பாதிப்பு உண்டு. கோவில்திருவிழா சமயத்தில் கோவில் வாகனம் கொண்டுபோகும்போது எதாவது பிரச்சனை வந்துவிடக்கூடாது என்று நினைத்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2011 ஆம் ஆண்டு நெட்டாங்கோடு பஞ்சாயத்து அலுவலகத்தில் அங்கிருந்த பஞ்சாயத்து தலைவர் தங்கேஸ்வரி அவர்களிடம் மனு கொடுத்தேன், அவர்கள் தீர்மானம் நிறைவேற்றினார்கள். மேற்சொன்ன தீர்மானத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நினைவில்லை.

4. வேறு யார்யாரிடம் முறையீடு செய்தேன் என்றால் குருந்தன்கோடு ஊராட்சி தலைவர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தக்கலை தாலுகா அலுவலகத்திலும் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் எத்தனை கிராமங்கள் உண்டு

(P.W.1)- ரமேஷ்

என்று சொன்னால் 8 கிராமங்கள் உண்டு. நெட்டாங்கோடு, மல்லங்கோடு, தாலத்துவிளை, பண்டாரவிளை, புலியடிசேரி, நங்கன்விளை, சுப்பிரமணியபுரம், மற்றும் இளந்தன்விளை கிராமங்கள் உண்டு. நான் சொல்வது பொய் என்றாலும் நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் 14 கிராமங்கள் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் ஏதாவது சண்டை சச்சரவுகள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. ஊர் கோவில் திருவிழாவில் ஏதும் பிரச்சனை ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் என்னுடைய முதல்விசாரணையில் நங்கன்விளை கிராம மக்கள் அமைதியின்று குழப்பங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. நானும் 2-ஆம் வாதியான செல்லத்துரையும் நங்கன்விளை கிராமத்தி சேர்ந்தவர்கள் அல்ல என்றாலும் மக்களால் தேந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை என்றாலும் அவ்வாறு ஊரில் பிரச்சனை ஏற்பட்டால் தனிப்பட்ட முறையில் தலையிட எனக்கு எந்த உரிமையும் கிடையாது வேண்டுமென்று குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வங்கி கணக்கு புத்தகம், தேர்தல் அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் கடவுச்சீட்டு ஆகியவை பெயர் மாற்றம் செய்யட்டிருந்தது என்று நான் பார்த்திருந்தால் அதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் வழக்கை ஜோடித்து பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குக்கிராமத்தில் உள்ள ஒரு ஊரின் பெயரை மாற்றுவதால் எனக்கு தனிப்பட்ட முறையில் எனக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றாலும் அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் மாவட்ட ஆட்சியருக்கோ அல்லது சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கோ முறையாக வேண்டுதல் செய்திருந்தால் அதை முறைப்படி அரசு அலுவலர்கள் குறையை நிவர்த்தி செய்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.

6. ஒரு ஊரின் பெயரை மாற்றுவதோ அல்லது திருத்தம் செய்வதோ அரசினுடைய அதிகார வரம்பிற்குள் வருவதாகும். நான் சொல்லியுள்ள மேற்படி 8

(P.W.1)- ரமேஷ்

நபர்களின் சொத்து வரி, ரசீது மற்றும் ஆவணங்களில் திருத்தம் செல்லவதோ அல்லது பஞ்சாத்தில் உள்ள கிராமங்களின் பெயரை மாற்றுவதோ அந்த கிராம பஞ்சயாத்தில் உள்ள பொதுமக்களுடைய விருப்பத்தின் பெயரிலோ அல்லது பஞ்சாயத்து தலைவர், நிர்வாகிகள் ஆகியோர்கள் முறையீட்டின் பெயரில் மட்டும்தான் அரசால் மாற்றம் செய்ய முடியும் என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கை தவறுதாலாக வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளேன் என்றும் 2-ஆம் பிரிதிவாதிக்கு எதிரா கிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரத்தை மேற்படி பிரதிவாதிகளிடம் கோர முடியாதுஎன்றாலும் அந்த வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல் (பொறுப்பு)